Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/12.8.2025/Script/

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 12.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தேசிய இரத்த சோகை ஒழிப்பு இயக்கம், சமத்துவம், கண்ணியம் மற்றும் மரபணு கோளாறுகளை எதிர்த்துப் போராடும் ஒரு புதிய சகாப்தத்தை குறிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்கம் குறித்து ஆய்வு செய்ய மூவர் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ண கொடி என்ற நிகழ்ச்சியை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

நாட்டின் 79-ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்திய கடற்படை பிரிவு சார்பில் இன்று மாலை புதுச்சேரி பழைய துறைமுக வளாகத்தில் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மோடி

வரும் 2047-ஆம் ஆண்டிற்குள் **அரிவாள் செல் நோயில்**லாத இந்தியாவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சீரிய முயற்சி குறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா எழுதிய கட்டுரையை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தனது சமூக ஊடக பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள அவர் தேசிய அரிவாய் செல் நோய் எனப்படும் இரத்த சோகை ஒழிப்பு இயக்கம், சமத்துவம், கண்ணியம் மற்றும் மரபணு கோளாறுகளை எதிர்த்துப் போராடும் ஒரு புதிய சகாப்தத்தை குறிப்பதாக தெரிவித்துள்ளார். இதேபோன்று இந்திய விவசாயிகளின் நலனை மேம்படுத்துவது தொடர்பான அரசின் நடவடிக்கைகள் குறித்து மாநிலங்களவை உறுப்பினர் திரு சத்னம் சிங் சந்து எழுதிய கட்டுரையை தமது சமூக ஊடக பக்கத்தில் பகிர்ந்துள்ள பிரதமர் பயிர் காப்பீடு, மண் பரிசோதனை அட்டைகள்,

நேரடி பலன் பரிமாற்றங்கள் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் அரசு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்குவதை இந்த கட்டுரை எடுத்துக் காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

*யஷ்வந்த் வர்மா*

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்கம் குறித்து ஆய்வு செய்ய மூவர் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக இன்று மக்களவையில் விளக்கமளித்த அவர் பிஜேபி உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் உள்ளிட்ட 146 உறுப்பினர்கள் கையெழுத்திட்ட பதவி நீக்க தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதுகுறித்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் இருவர் மற்றும் மூத்த வழக்கறிஞர் அடங்கிய குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு ஓம் பிர்லா தெரிவித்தார்.

*நிதி ஆயோக்*

35 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அடல் டிங்கரிங் ஆய்வகங்களை சேர்ந்த மாணவர்களை ஒருங்கிணைத்து மெகா டிங்கரின் தினத்தை இன்று நிதி ஆயோக் நடத்தியது. காணொளி வாயிலாக இன்று நடைபெற்ற இந்த நிகழ்வில் 4.5 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். இதுகுறித்து நிதி ஆயோக் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த நிகழ்வு இந்தியாவின் எதிர்காலத்தை உருவாக்கும் படைப்பாற்றல் மிக்க புதுமையாக்க சிந்தனை கொண்ட அடுத்த தலைமுறையினரை ஊக்கப்படுத்துவதில் கவனம் செலுத்தியதாக தெரிவித்துள்ளது.

*ஹர் கர் திரங்கா*

சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தேசியக் கொடி பேரணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் மத்திய கலாச்சார அமைச்சகத்தால் இன்று காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய கொடி பேரணி புதுடெல்லியில் பாரத் மண்டபத்தில் தொடங்கி இண்டியா கேட் வரை நடைபெற்றது. மத்திய அமைச்சர்கள் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், திரு கிரண் ரிஜிஜு, திரு சஞ்சய் சேத், டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உள்ளிட்டோர் இந்த பேரணியில் பங்கேற்றனர்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு ………………..

(வாய்ஸ்)

*ஹர் கர் திரங்கா*

<u>இப்பேரணியை தொடக்கி வைத்துப் பேசிய மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தேசிய கொடியில் உள்ள மூவர்ணம்</u>

நாட்டை ஒருங்கிணைப்பதுடன் நாட்டிற்காக தங்களது வாழ்க்கையை தியாகம் செய்தவர்கள் குறித்து நமக்கு நினைவு படுத்துவதாகவும் உள்ளது என்றார். வளர்ச்சி அடைந்த பாரதத்தை நோக்கிய பயணத்தில் ஒற்றுமையின் அடையாளமாக இந்தப் பேரணி திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார். ஜம்மு-காஷ்மீரின் ஸ்ரீநகரில் நடைபெற்ற தேசியக் கொடி பேரணியை துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா தொடக்கி வைத்தார். ஷெர் இ காஷ்மீர் மாநாட்டு அரங்கில் தொடங்கி தாவரவியல் பூங்கா வரை நடைபெற்ற இப்பேரணியில் ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தமிழகத்தில் சேலம் அஞ்சல் துறை சார்பில் நடைபெற்ற பேரணியில் அஞ்சலக ஊழியர்கள் பங்கேற்றனர்.

*டாக்டர் ஜிதேந்திர சிங்*

ஸ்வாமித்வா திட்டம் குடிமக்களை மையமாகக் கொண்ட நிர்வாகத்தின் உலகளாவிய மாதிரியாக உருவெடுத்துள்ளது என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற இந்திய நில அளவீடு துறையின் உயர்மட்ட ஆய்வு கூட்டத்திற்கு தலைமை தாங்கி பேசிய அவர் குடிமக்கள் தங்களின் நிலம் குறித்த வரைபடத்தை சுயமாக உருவாக்கிக் கொள்ள இத்திட்டம் வழிவகை செய்வதோடு இதற்காக பல 10 ஆண்டுகளாக வருவாய் துறை அதிகாரிகளின் கருணையை எதிர்பார்த்து இருந்தது முடிவுக்கு வந்துள்ளதாக தெரிவித்தார். ஸ்வாமித்வா திட்டத்தில் பயன்படுத்தப்படும் நவீன தொழில் நுட்பங்கள் குறித்து எடுத்துரைத்த அவர் இது நிலங்களின் வரைபடத்தை தயாரிப்பதோடு பொருளாதாரத்தின் அங்கங்களாக திகழும் பல்வேறு துறைகளுக்கு புவி சார்ந்த தகவல்களை தரும் அமைப்பாகவும் செயல்படுகிறது என்றார். இந்திய நில அளவீடுகளின் நவீன தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க அனைத்து அமைச்சகங்கள், அரசுத் துறைகள் மற்றும் மாநிலங்களுடன் இணைந்து பயிற்சி பட்டரையை நடத்துமாறு அத்துறை அதிகாரிகளுக்கு டாக்டர் ஜிதேந்திர சிங் உத்தரவிட்டார்.

*புதுவை-பேரணி (15)*

புதுச்சேரி அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ணக் கொடி என்ற மாநில அளவிலான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழா இன்று மாலை புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள காந்தி திடலில் நடைபெற்றது. இதில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ண கொடி என்ற நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி,

சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு லட்சுமி நாராயணன், திரு ஜெயக்குமார், திரு பி ஆர் என் திருமுருகன், திரு ஜான்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

-- **புதுச்சேரி** பாரதிய ஜனதா கட்சி சார்பில் 79-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக் கொடி வாகன பேரணி நடைபெற்றது. கருவடிக்குப்பம் சித்தானந்த கோவிலில் இருந்து தொடங்கிய இப்பேரணியை உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தொடக்கி வைத்தார். நேருவீதி, ஆம்பூர் சாலை, உள்ளிட்ட வீதிகள் வழியாக சென்று எல்லைப்பிள்ளைச் சாவடி இந்திராகாந்தி மகப்பேறு மருத்துவமனை அருகே நிறைவடைந்த இப்பேரணியில் பிஜேபி மாநில தலைவர் திரு விபி ராமலிங்கம் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

*எய்ட்ஸ் தொடக்க விழா*

பாண்டிச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில் 2 மாத எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் தீவிர விழிப்புணர்வு பிரச்சாரத்தின் தொடக்க விழா இன்று கம்பன் கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு 2 மாத விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடக்கி வைத்துப் பேசுகையில் புதுச்சேரி சிறிய மாநிலமாக இருந்தாலும் மருத்துவ வசதியை ஏற்படுத்தி கொடுப்பதில் சிறந்த மாநிலமாக திகழ்கிறது என்றார். வாழ்க்கையில் சிறப்பாக செயல்பட நல்ல சிந்தனை என்பது அவசியமானது என்றும் அதற்கு நல்ல புத்தகங்களை படிப்பதுடன் உடல் ஆரோக்கியத்தை தொடர்ந்து பாதுகாக்க வேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

முதலமைச்சர் மேலும் கூறுகையில்........

(வாய்ஸ்-முதலமைச்சர்)

*எய்ட்ஸ் தொடக்க விழா*

(வாய்ஸ்)

இவ்விழாவின் போது எய்ட்ஸ் விழிப்புணர்வு சுவரொட்டிகளை முதலமைச்சர் வெளியிட்டார். முன்னதாக கலைக் குழுவினரின் பிரச்சார ஊர்தியையும் மாணவர்கள் பங்கேற்ற எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணியையும் அவர் கொடி அசைத்து தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி, சுகாதாரத் துறை செயலர் திரு ஜெயந்த் குமார் ரே, இயக்குநர் டாக்டர் செவ்வேள் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

*இசை நிகழ்ச்சி*

நாட்டின் 79-ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்திய கடற்படை பிரிவு சார்பில் புதுச்சேரியில் இன்று இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. பழைய துறைமுக வளாகத்தில் இன்று மாலை நடைபெறும் இசைக் கச்சேரியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தலைமை விருந்தினராக கலந்து கொள்கிறார்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு............

(வாய்ஸ்-)

*இசை நிகழ்ச்சி*

(வாய்ஸ்)

இந்த இசை கச்சேரியில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிக்கான இந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சதீஷ் ஷெனாய் முன்னிலை வகிக்கிறார். இதில் இந்திய கடற்படையைச் சேர்ந்த 50 இசைக் கலைஞர்கள் கலந்து கொண்டு 30-க்கும் மேற்பட்ட பாடல்களை இசைக்க உள்ளனர். 1 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற உள்ள இந்த இசை நிகழ்ச்சியில் தேசிய கீதம், ஜெய் ஹோ, உள்ளிட்ட பல்வேறு மொழி பாடல்களும் இசைக்கப்பட உள்ளன.

*காரைக்கால்*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் வேண்டுகோளுக்கு இணங்க காரைக்காலில் வீடு தோறும் தேசியக் கொடி இயக்கம் சார்பில் தேசியக் கொடி விழிப்புணர்வு பேரணி சுதந்திரப் போராட்ட தலைவர்களின் திருவுருவ சிலைகளை தூய்மை செய்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளிலும் 5 ஆயிரம் தேசியக் கொடியினை வீடுதோறும் ஏற்றும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகவும் இந்நிகழ்ச்சியின் பொறுப்பாளர் மற்றும் இந்த இயக்கத்தின் மாநில செயலாளர் திரு துரை சேனாதிபதி தெரிவித்துள்ளார்.

*யானைகள் தினம்*

உலக யானைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இத்தினத்தை ஒட்டி, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் உலகில் உள்ள மொத்த ஆசிய யானைகளில் 60 சதவிகிதம் இந்தியாவில் இருப்பது பெருமிதம் அளிப்பதாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார். நம் நாட்டில் யானைகள் மரியாதைக்கு உரிய வகையில் போற்றப்படுவதாக தெரிவித்துள்ள அவர் செயற்கை நுண்ணறிவு சார்ந்த முன்னெச்சரிக்கை சாதனைகளைப் பயன்படுத்தி மனிதர்களுக்கும் யானைகளுக்கும்

இடையேயான மோதலை குறைத்து யானைகளை பாதுகாக்க உறுதியேற்போம் என்றும் திரு பூபேந்தர் யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

வானிலை

மத்திய வங்க கடல் மற்றும் தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்றும் நாளையும் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலும் புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டி உள்ள வடமேற்கு வங்ககடல் பகுதியில் நாளை ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக கூடும் என்றும் அடுத்த 48 மணி நேரத்தில் இது மேலும் சற்று வலுப்பெறும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தேசிய இரத்த சோகை ஒழிப்பு இயக்கம், சமத்துவம், கண்ணியம் மற்றும் மரபணு கோளாறுகளை எதிர்த்துப் போராடும் ஒரு புதிய சகாப்தத்தை குறிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நீதிபதி யஷ்வந்த் வர்மா மீதான பதவி நீக்கம் குறித்து ஆய்வு செய்ய மூவர் குழு அமைக்கப்பட்டுள்ளதாக மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ண கொடி என்ற நிகழ்ச்சியை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார்.

நாட்டின் 79-ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு இந்திய கடற்படை பிரிவு சார்பில் இன்று மாலை புதுச்சேரி பழைய துறைமுக வளாகத்தில் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/12.8.2025/Script/

-------------------